2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 1, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்

1—

நீர்த்தேக்கம் அமைத்தல்

***24428—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் ராமகிரி நீர்த்தேக்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) வினா எழவில்லை.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியம் ராமகிரிக்கு அருகில் ராமகிரி, ஆர். கோம்பை இரண்டு மலைகளும் 'வி' வடிவத்தில் இருக்கிற காரணத்தினாலும் அதில் அணை கட்டும்போது அரசுக்கு அதிகமான நிதிச் செலவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கோவிலூர், கோம்பை, வடுகம்பாடி ஊராட்சிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசனம் அடையவும், நிலத்தடி நீர் பெருகவும், பல்லாயிரக்கணக்கான மக்கள், விவசாயிகள் முன்னேறவும் அடுத்த நிதியாண்டிலாவது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து நிறைவேற்றுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2004 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் புதியதாக நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் எதுவும் இல்லை. ஏனெனில், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் ஏற்கெனவே ஆர். கோம்பை கிராமத்தில் ராமகிரி கண்மாய் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. 8.11 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள இக்கண்மாயினால் 194.62 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. மானாவாரி கண்மாயான இக்கண்மாய்க்கு நீர்வரத்து—அய்யலூர் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும்—மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள இந்தச் சிற்றோடையின் நீர் வந்து கண்மாய் நிரம்பியவுடன் வழிந்தோடி நேரடியாக குடகனாற்றில் சேருகிறது.

நீண்ட காலமாக பராமரிப்பின்றி இருந்த இக்கண்மாயைப் புனரமைக்கும் பணி ரூபாய் 110.19 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. இக்கண்மாயின் மிகை நீர், மற்றொரு புதிய கண்மாயோ அல்லது அணைக்கட்டோ அமைப்பதற்குரிய அளவு இல்லாததால் ராமகிரியில் நீர்த்தேக்கம் எதுவும் அமைக்க வாய்ப்பு இல்லை. இருப்பினும், திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கரையனூர் கிராமத்தில் புதிய கண்மாய் அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டங்கள், வடிவமைப்புத் திட்ட வட்டப் பொறியாளர்களால் 2001-2002-ல் 200 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் வகையில் மதிப்பீடு ரூபாய் 282.25 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இக்கண்மாய் அமைக்க 32 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. 10 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இக்கண்மாய் பணியின் பயன் பெறும் விகிதம் 1.18:1 ஆகும். இக்குறிப்புகளுடன் திருப்பப்பட்ட இம்மதிப்பீடு மீண்டும் மறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டம் நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்றவுடன் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திரு. ஜெ. குரு என்கிற குருநாதன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.